

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.12.2025) சென்னையில் நடைபெற்ற தியாகராயநகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.கருணாநிதி அவர்களின் மகன் சிபி – வர்ஷா (எ) வர்ஷலட்சுமி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.12.2025 அன்று சென்னை திருவான்மியூரில் நடைபெற்ற தியாகராயநகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.கருணாநிதி அவர்களின் மகன் சிபி வர்ஷா (எ) வர்ஷலட்சுமி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## டிச.20, 21 – நெல்லை மாவட்டத்தில் இரண்டு நாட்கள் சுற்றுப் பயணம்!

# ‘பொருநை’ அருங்காட்சியகம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## 44,924 பயனாளிகளுக்கு – 101 கோடி ரூபாய் மதிப்பில் –
## அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்! அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

**நெல்லை, டிச.18 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் 2 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து 538 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப்பணி களை துவக்கி 44,924 பயனாளிகளுக்கு 100 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார் என நெல்லையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.**

திராவிட மாடல் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் வரும் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ரூபாய் 67.25 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகம் மற்றும் புதிய திட்டங்கள்,முடிவுற்ற திட்டப்பணி களை துவக்கி வைக்கிறார்கள்.

நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மைதானத்தில் அரசு விழாவிற்கான பிரமாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்தப் பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன் கான், முன்னாள் எம்.பி. ஞான திரவியம், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே. ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனை கூடுதல் கட்டிடம்,பொருநை அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்கள்.



பின்னர் அரசு விழா குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனையும் மேற்கொண்டனர்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

திராவிட மாடல் முதல்வர் அவர்கள் வருகிற 20-12-2025 மற்றும் 21-12-2025 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்கள்.

20-ஆம் தேதி சனிக்கிழமை மதியம் வரும் முதலமைச்சர் அவர்களுக்கு கட்சியினர் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். இதனையடுத்து முதல்வர் அவர்கள் பாளையங்கோட்டை டக்ரம்மாள் புரத்தில் கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் நடத்தும் கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொள்கிறார்.

முதலமைச்சர் அவர்கள் மறுநாள் 21-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து பார்வையிடுகிறார்கள். தொடர்ந்து அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 72.10 கோடி மதிப்பீட்டில் இதயம், நரம்பியல், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் சிகிச்சைகளுக்கான மேம்பாட்டு மருத்துவமனை கட்டிடத்தையும் திறந்து வைத்து விழா மேடைக்கு வரும் முதலமைச்சர் அவர்கள் விழாவில் 538.48 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டப்பணிகள், முடிவுற்ற பணிகளைத் துவக்கி வைக்கிறார்கள்.

தொடர்ந்து அரசு விழாவில் 44,924 பயனாளிகளுக்கு 100 கோடியே 95 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி 50க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து விழா பேருரையாற்றுகிறார்கள். மேலும் உழவர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்பாகவும் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கபடுகிறது. விழாவில் 50,000 பேர்கள் பங்கேற்கும் வகையில் மேடை பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

மாநகரப் பகுதிகளில் புதிய சாலை அமைப்பதற்கான நிதி முதலமைச்சர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. வந்தவுடன் சாலைகள் அமைக்கப்படும். மழை காலங்கள் முடிந்துவிட்டது. இன்னும் ஒரு சில நாட்களில் சாலை அமைக்கும் பணி தொடங்கும். பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நெல்லை மாநகர பகுதிகளில் நடந்து வருகிறது. வீட்டு இணைப்பு கொடுக்கும் பணியும் நடந்து வருகிறது. அதன் காரணமாக சாலைகள் புதிதாக அமைக்கப்படாமல் பேட்ச் ஓர்க் நடந்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சித்திக், பேச்சிபாண்டியன், ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் மேயர் சரவணன், பரமசிவ அய்யப்பன், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், சுரேஷ்,கிரிஜா குமார், மாநகர பொறுப்பாளர்கள் மேற்கு சு.சுப்பிரமணியன், கிழக்கு தினேஷ், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்தியானந்த், ஒன்றிய செயலாளர்கள் போர்வெல் கணேசன், செல்வ கருணாநிதி, அலெக்ஸ் அப்பாவு, சுபாஷ் தங்கபாண்டியன், அன்பழகன், வேலங்குளம் கண்ணன், நகர செயலாளர் கணேசன், பகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் சங்கர். அண்டன் செல்லதுரை, அணி அமைப்பாளர்கள் பிரேம் ஆனந்த், ராஜா சங்கரலிங்கம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் இளைஞரணி மீரான்மைதீன், வேல்முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.


